
# ஜீவ ஒளி

"என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்."
(யோவான் 8:12)

## 2020 ஜூன் வெளியீடு




என் ஜனமே, நீ போய் உன் அறைகளுக்குள்ளே பிரவேசித்து, உன் கதவுகளைப் பூட்டிக்கொண்டு, சினம் கடந்துபோகுமட்டும் கொஞ்சநேரம் ஒளித்துக்கொள். இதோ, பூமியினுடைய குடிகளின் அக்கிரமத்தினிமித்தம் அவர்களை விசாரிக்கும்படி கர்த்தர் தம்முடைய ஸ்தானத்திலிருந்து புறப்பட்டுவருவார்.

ஏசாயா 26:20,21

# ஜீவ ஒளி

தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய, ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியை பெற்றுக்கொடுக்கக்கூடிய **ஜீவ ஒளி** சஞ்சிகையை வெளியிடுவதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இச்சஞ்சிகையின் மூலம் அநேக விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சி அடைவதும் இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்வதுமே எங்களுடைய ஜெபமாயுள்ளது.

கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம் வெளியிடும் இவ்விலவச சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் கடைசி பக்கத்தில் உள்ள கூப்பனை பூர்த்தி செய்து கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**ஜீவ ஒளி**
**கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம்**
**07, விவேகானந்த வீதி, கொழும்பு 06.**
**தொ. பே.: 011 2 581901**
www.christianfellowshipcentre.com

# தேர்தல்

## ‘நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டேன்’ யோவான் 15:19

சற்றேனும் சந்தேகத்திற்கிடமில்லாமல் மெய்யாகவே கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு இவ்வார்த்தை பொருந்துகிறது. எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் தேவனுடைய ஜனத்தை வர்ணிப்பதற்காக பவுல் அப்போஸ்தலன் ஏழு பெயர்களை உபயோகிக்கிறார். சபை, சரீரம், புதிய மனிதன், தேவனுடைய குடும்பம் அல்லது வீடு, தேவனுடைய கரத்தின் வேலைப்பாடுகள்(கிரியை), பரிசுத்த ஆலயம், மற்றும் கிறிஸ்துவின் மணவாட்டி எனும் ஏழு நாமங்களால் அழைக்கப்படுகின்றனர்.

இவர்களை சபை என்று அழைப்பதற்கான காரணம் என்ன? எபே 1:22- கிரேக்க மொழியில் சபை என்ற பதத்தின் பொருள், அழைக்கப்பட்டவர்கள் என்பதாகும். சிறப்பான நோக்கத்தோடு அழைக்கப்படுவதாகும். யோவான் 15: 16,19ல் “நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டேன் என்று சொல்லும்பொழுது “நான் உங்களை உலகத்திலிருந்து பிரித்தெடுத்து, விசேஷித்தவர்களாய் மாற்றுகிறேன்” என்பதாகும். இது நமக்கு சாதாரண முறையில் நண்பர்களைத் தெரிந்துகொள்வது போலாகது. அதற்கு பதிலாக மிகுந்த சிரமத்துடன் அல்லது சக்தியை செலவிட்டு, கடினமான முறையில் சொந்தமாக்கிக் கொள்வதைக் குறிக்கும். வேறுவிதமாகக் கூறினால், கர்த்தர் நம்மை உலகத்தினின்று வேறு பிரிப்பதற்காக தம்முடைய சர்வ வல்லமையையும், ஞானத்தையும் பிரயோகிக்கிறார். சபை என்ற பதத்தின் அர்த்தம் இதுதான்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒருவரே மனிதரை பாவமாகிய பயங்கரமான சேற்றிலிருந்து பிரித்தெடுக்க அல்லது பிடுங்கி எடுக்க வல்லமையும், ஆற்றலும் உள்ளவராக இருக்கிறார். இதற்காகவே அவர் இந்த உலகத்திற்கும் வந்தார். இவ்வாறு பிசாசு, பாவம், உலகம், மாமிசம் ஆகியவற்றின் அடிமைத்தனத்தில் இருந்து பிரித்தெடுப்பது அல்லது பிடுங்கி எடுப்பது அல்லது கவர்ந்திழுப்பது, தெரிந்தெடுப்பது என்ற அர்த்தத்தில் “சபை” எனும் பதத்தைப் பயன்படுத்துகிறார்.

அவர் நம்மைத் தெரிந்துகொள்கிறார் என்பதற்குரிய சான்று நம்முடைய ஜீவியங்களில் காணப்படுவதற்கு முன்பாக அவர் நம்மை இழுக்கிற காந்த சக்தியை நாம் உணர வேண்டும்.

கர்த்தர் உன்னைத் தெரிந்து கொண்டிருக்கிறாரா?
அதற்கான அகச்சான்று அல்லது உள்ளுணர்வு உனக்கிருக்கிறதா?

- Bro. Bakth Singh -

# வேதத்துடன் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்

**1. தனக்கென ஒரு பிரதியை பெற்றுக்கொள்ள வேண்டும் - உபாகமம் 17: 20**

அவன் லேவியராகிய ஆசாரியரிடத்திலிருக்கிற நியாயப்பிரமாண நூலைப்பார்த்து, தனக்காக ஒரு பிரதியை எழுதி, தன்னிடத்தில் வைத்துக்கொண்டு,..

**2. தினந்தோறும் வாசிக்க வேண்டும் - உபாகமம் 17: 20**

...தன் ஜீவனுள்ள நாளெல்லாம் அதை வாசிக்கக்கடவன். இப்படிச்செய்வதினால், தானும் தன் குமாரரும் இஸ்ரவேலின் நடுவே தங்கள் ராஜ்யத்திலே நீடித்து வாழுவார்கள்.

**3. வேதத்தைத் தியானிக்க வேண்டும் - சங்கீதம் 1:2**

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

**4. மனப்பாடம் செய்ய வேண்டும் - சங்கீதம் 119:11**

நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன்.

**5. கீழ்ப்படிந்து செயற்படுத்த வேண்டும் - யாக்கோபு 1:22**

நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்.

**6. வேதத்தை கையில் எடுத்து செல்ல வேண்டும். - சங்கீதம் 149:8**

வெளிப்புற சாட்சி - அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியும், அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும்.

**7. கற்றுக்கொண்டு கற்றுகொடுக்க வேண்டும் - 2 தீமோத்தேயு 2:15**

நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு

**8. வேதத்தைப் பற்றி கதைத்துக்கொண்டிருக்க வேண்டும். - உபாகமம் 6:7**

நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக்குறித்துப் பேசி,...

- Sis. Tilaka -

# கொரோனா கற்றுத்தரும் பாடம்

நிலவி வரும் கொரோனா எனும் நோய்த்தொற்று காலத்தில் இருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய மூன்று முக்கிய விடயங்களை குறித்து ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

தற்போதைய நிலைமையிலிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய முதலாவது பாடம் தான், மனிதன் எவ்வளவு உதவி அற்றவனாகவும் இலகுவில் பாதிப்படையக்கூடியவனாகவும் இருக்கிறான் என உணர்தல் ஆகும்.

மனிதனின் மனம் சோர்வுற்ற-தாயும் நிகழும் சம்பவங்களால் பயம் நிறைந்ததாயும் இருக்கிறது. ஒரு சில நாட்களிலேயே நிலைமை கட்டுப்பா-ட்டை மீறிச்சென்றுவிட்டது.

எனவே மனிதன் உதவியற்றவனா-கவும் எளிதில் பாதிப்படைய கூடியவன் எனவும் இது எடுத்துக்காட்டுகிறது.

இரண்டாவதாக தேவனுடைய வார்த்தையின் நம்பகத்தன்மையையும் உணர்ந்து கொள்கிறோம். ஏனென்றால், எதிர்காலத்திலே உபத்திரவகாலம் என கூறப்படும் ஓர் குறிப்பிட்ட காலத்திலே சம்பவிக்க இருப்பவை பற்றி பரிசுத்த வேதாகமத்திலே எழுதப்பட்டிருக்கிறது.

உலக சனத்தொகையின் நான்கில் ஒரு பகுதி மக்கள் பட்டயத்தினாலும் பஞ்சத்தினாலும் சாவினாலும் காட்டு மிருகங்களினாலும் அழிக்கப்படு-வார்கள் என வெளிப்படுத்தல் 6:5இல் எழுதப்பட்டுள்ளது. இதை போன்ற ஒரு வசனம் நிறைவேறுதல் சாத்தியமானதா என யாருடைய மனதிலாவது ஏதே-னும் சந்தேகம் இருந்துருக்குமாயிருந்-தால், தற்போதைய நிலைமையானது அச்சந்தேகத்தை போக்கி இது சாத்-தியமாகும் என்பதற்கு சான்றாகிறது. வேகமாய் பரவி வரும் இந்த வைரஸ் நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கப்பட்-டாலும் இதை விட மோசமான, தொற்றிய உடனேயே உயிரை பறிக்கும் வேறோர் வைரஸ் வந்தால் உலகின் நிலைமை என்னவாகும்? இது நடக்கத்தான் போகிறது என வேதாகமம் சொல்லு-கிறது.

ஆனால் இவ்வசனமானது உபத்-திரவ காலத்திலேயே நிறைவேறும். இப்பொழுது அல்ல.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வந்து தம்முடைய ஜனங்களை எடுத்து சென்றதின் பின்னரே மத்தேயு 24ல் ஆண்டவர் இயேசு சொல்லியது போன்ற மகா உபத்திரவ காலம் ஆரம்பமாகும்.

ஆகவே, அவருடைய வருகையை எதிர்பார்த்து அதற்கு ஆயத்தமாய-ிருப்போம். ஒரு வேளை நாம் ஆயத்தம் அற்றவர்களாய் இருப்போமாயிருந்தால் அந்த மகா உபத்திரவ காலத்திற்கு முகங்கொடுக்க நேரிடும்.

நாம் கற்றுக்கொள்ள கூடிய மூன்றாவது பாடம் தான், ஒரு வேளை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகை தாமதிக்குமாயிருந்தால், நாம் எதிர்கொள்ள வேண்டிய தவிர்க்க முடியாத சரீர மரணத்திற்கு ஆயத்தா-மாயிருக்க வேண்டும்.

கடந்த சுமார் ஆறு மாத காலத்திலே ஏறத்தாழ நான்கரை இலட்சத்திற்கும் அதிகமானோர் இந்த கொரோனா நோய் காரணமாக இறந்துள்ளனர்.

ஆனால், இதே ஆறு மாத காலத்திலே இந்த நோய் இல்லாமலேயே விபத்து, வியாதி, வயது போன்ற பல்வேறு காரணங்களால் சுமார் இருநூற்றைம்பது இலட்சத்திற்கும் அதிகமானோர் இறந்துள்ளனர்.

பாவத்தின் சம்பளம் மரணம். இந்த வைரசிடம் இருந்து நீங்கள் தப்பினாலும் இயற்கையில் நீங்கள் அடைய வேண்டிய மரணத்தை பற்றி சிந்தித்ததுண்டா? ஒவ்வொரு நாளும் ஒன்றரை இலட்சத்திற்கும் அதிகமானோர் இறக்கிறார்கள். ஒரு நாளில், நீங்களும் அவர்களில் ஒருவராகப்போகிறீர்கள்.

மரணத்திற்கு பின் நீங்கள் எங்கே போகப்போகிறீர்கள் என உங்களுக்கு தெரியுமா? உங்களுக்கு நித்தியவாழ்வு உள்ளதா? ஆண்டவர் இயேசுவால் மட்டுமே உங்களுக்கு நித்திய வாழ்வை அளிக்க முடியும். உங்கள் பாவத்தின் தண்டனையை அவர் அனுபவித்தார். மரித்தோரில் இருந்து உயிரோடு எழும்பினார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நம்புங்கள். அவர் உங்கள் பாவங்களை மன்னிப்பார்.

Bro. Neville

# மனந்திரும்பு

என் ஜனமே, நீ போய் உன் அறைகளுக்குள்ளே பிரவேசித்து, உன் கதவுகளைப் பூட்டிக்கொண்டு, சினம் கடந்துபோகுமட்டும் கொஞ்சநேரம் ஒளித்துக்கொள். ஏசாயா 26:20

பாருங்கள்! இங்கே சமூக இடைவெளியை பற்றியும் தனிமைப்படுத்தலை பற்றியும் ஆண்டவர் பேசுகிறார்.

ஏசாயா மூலமாக தேவன் தம்முடைய ஜனத்துடனே வரப்போகும் நியாயத்தீர்ப்பை பற்றி பேசுகிறார்.

இந்த காலங்களிலே நாம் வீடுகளுக்குள்ளேயே முடக்கப்பட்டிருக்கிறோம். வீட்டுள்ளே இருக்கும் நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்?

இது மனந்திரும்புதவற்கான அழைப்பாகும். எமது வாழ்க்கையை குறித்து கணக்கெடுப்பதற்கான நேரம்.

நமக்கு முன் இருப்பதையும் தேவனையும் நம்மில் அநேகர் மறந்து விட்டிருக்கிறோம். பணம் எமது தேவனாயிருக்கிறது. எமது திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள முற்படுகிறோம். அதுவே நமது தேவனாயிருக்கிறது. வேறு பல விடயங்கள் எமது வாழ்க்கைக்குள்ளே சென்று தேவனுடைய வார்த்தையை வெளியேற்றி விட்டது.

நாம் நமது வாழ்க்கையை எண்ணி பார்க்கும்படி தேவன் நம்மை இப்போது உள்ளே அடைத்து வைத்திருக்கிறார்.

நாம் தேவனுக்கு முன்பாய் சென்று நம்மை சோதித்து பார்த்தால் நாம் அவருடைய கிருபையை விட்டும் சித்தத்தை விட்டும் எவ்வண்ணம் விலகி விழுந்து போயுள்ளோம் என்பதைக் காட்டுவார்.

# மௌனமாயிருக்காதே

நீ இந்தக் காலத்திலே மவுன-மாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள். நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவிய-ாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும், என்று சொல்லச்சொன்னான். எஸ்தர் 4: 14

இவை எஸ்தருக்கு சொல்லப்பட் மொர்தெகாயின் வார்த்தைகள். தமது இனத்தாரை பாதுகாக்கும் பெரிதான பொறுப்பு எஸ்தர் மீது சுமந்தது. அவள் அரசன் முன் செல்ல தயங்கினாள். ஆனால் “நீ இப்படிப்பட்ட காலத்-துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே” என மொர்தெகாய் அவளுக்கு ஞாபக படுத்தினான்.

அன்பானவர்களே! நாமும் தேவன் நமக்காக வைத்திருக்கும் அவருடைய சித்தத்தையும் திட்டத்தையும் நிறை-வேற்றுவதற்காகவே இக்காலத்திலே இரட்சிக்கபட்டவர்களாக தேவனுடைய இராஜ்யத்திற்குள் அழைக்கப்பட்டு இருக்கிறோம்.

மேலும், “நீ இந்தக் காலத்-திலே மவுனமாயிருந்தால், சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும்” என மொர்தெகாய் கூறி, தேவன் தமது திட்டத்தை எப்படியாயி-னும் நிறைவேற்றுவார் ஆனால் நீ உனது வாய்ப்பை இழந்து போவாய் என்றான்.

ஆகவே, எம்மை சுற்றி முழு உலகமும் அழிந்து கொண்டிருக்கும் நேரத்திலே தேவனுக்கு ஊழியம் செய்வதற்காகாவே தேவன் நம்மை இக்காலத்திலே அழைத்திருக்கிறார்.

விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் அழிந்துப்போகாமல் நித்தியஜீவனை அடையும் படியாகவே தேவன் தமது ஒரே பேறான குமாரனை அனுப்பி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.

நாம் பிரசங்கிக்காவிட்டால், அவர்கள் எவ்வாறு கேள்விப்படு-வார்கள்? அவர்கள் கேள்விப்படாவ-ிட்டால் விசுவாசிக்க மாட்டார்கள். விசுவாசிக்காவிட்டால் அழிந்து பே-ாவார்கள்.

அதனால் விரயமாக்குதவதற்கு நம்மிடம் நேரம் இல்லை. உங்கள் அயலகத்தாரிடமிருந்து ஆரம்பியுங்கள். சாட்சி பகிருங்கள். ஆண்டவர் இயேசுவின் சுவிசேஷத்தை சொல்லு-ங்கள்.

ஜெபிக்கவும் ஊழியம் செய்யவும் தேவன் உங்களை அழைக்கிறார்.

Bro. Neville



# ஜீவ புத்தகம்

பின்வரும் பைபிள் குறிப்புகள் ஜீவ புத்தகத்தைப் பற்றி பேசுகின்றன.

”ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும். ஜீவ புஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கி போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன் (வெளிப்படுத்துதல் 3: 5).

இந்த வசனத்தில், ஜெயிப்பவர்கள் வெள்ளை நிறத்தில் (தூய்மையின் சின்னம்) ஆடை அணிவார்கள் என அறிகிறோம். எங்கள் பெயர்களைச் சேர்க்க, நாம் சுத்திகரிக்கப்பட வேண்டும் அல்லது ”ஜெயிக்கிறவர்கள்” ஆக இருக்க வேண்டும். இதன் பொருள் கிறிஸ்துவின் இரட்சிப்பை நிராகரிப்பவர்கள் சேர்க்கப்பட மாட்டார்கள் என்பதே.

வெளிப்படுத்துதல் 21:27 கூறுகிறது, “தூய்மையற்ற எதுவும் அல்லது வெட்கக்கேடான அல்லது வஞ்சகமான செயல்களைச் செய்கிற எவரும் அதில் (சொர்க்கத்தில்) நுழைய முடியாது, ஆனால் ஆட்டுக்குட்டியின் ஜீவ புத்தகத்தில் பெயர்கள் எழுதப்பட்டவர்கள் மட்டுமே பிரவேசிக்க முடியும்.”

ஜீவ புத்தகத்தின் முக்கியத்துவம் வெளிப்படுத்துதல் 20:15ல் நிறுவப்பட்டு உள்ளது. “யாருடைய பெயர் ஜீவ புத்தகத்தில் எழுதப்படவில்லையோ, அவர் அக்கினிக்கடலில் வீசப்பட்டார். இது ஒரு நித்திய தீர்ப்பு. அக்கினிக்கடல் என்பது சாத்தானுக்கு உருவாக்கப்பட்ட இடமாகும் (மத்தேயு 25:41),

**ஜீவ புத்தகம் - உங்கள் பெயர் எழுதப்பட்டுள்ளதா?**

உங்கள் பெயரை ஜீவ புத்தகத்தில் பதிவு செய்வது மிகவும் எளிது. அவ்வாறு செய்ய, நாம் அனைவரும் பாவிகள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ரோமர் 3:23 கூறுகிறது, ”எல்லோரும் பாவம் செய்து, தேவ மகிமை அற்றவர்களானோம்.” பாவம் என்றால், கடவுள் நமக்காக நிர்ணயித்திருக்கும் அடையாளத்தை (சரியான தரத்தை) தவறவிட்டோம் என்பதாகும். பாவத்திற்கான தண்டனை மரணம். ரோமர் 6:23 கூறுகிறது, ”பாவத்தின் சம்பளம் மரணம், ஆனால் தேவனுடைய பரிசோ நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவில் நித்திய ஜீவன்.” இந்த வசனம், மரணம் நம் பாவத்திற்கான கூலி என்று கூறுகிறது. அதை தான் நாம் சம்பாதிக்கிறோம். நாம் நிரந்தரமாய் இறந்து கடவுளிடமிருந்து பிரிந்திருப்பதற்கே தகுதியானவர்கள்.

ஆனால் செய்தி அங்கே முடியவில்லை! கிறிஸ்து நமக்காக மரித்தார். ரோமர் 5:8 கூறுகிறது, “நாம் பாவிகளாக இருந்த போது, கிறிஸ்து (இயேசு) நமக்காக மரித்ததினால் தேவன் நம் மீது கொண்டுள்ள தமது அன்பை வெளிப்படுத்துகிறார்.” இயேசு நம் இடத்தை வகித்து இறந்தார். மூன்று நாட்களுக்குப் பிறகு, பாவம் ஜெயிக்கப்பட்டது என்பதை நிரூபிக்கும் விதமாக இயேசு மரணத்திலிருந்து எழுந்தார்.

கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள் என்பதே அந்த பெரிய செய்தி.

எபேசியர் 2:8-9 எனும் வசனங்கள் கூறுகிறன, “கிருபையினாலே நீங்கள் விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானது அல்ல, இது கடவுளின் வரம், செயல்களால் அல்ல, யாரும் பெருமை கொள்ள முடியாது.” நித்திய மரணத்துக்கு பதிலாக உங்களை மன்னித்து உங்களுக்கு நித்திய ஜீவனை கொடுக்க இயேசுவின் மீது நீங்கள் நம்பிக்கை வைக்கலாம்.

ஜீவ புத்தகத்தில் உங்கள் பெயர் இருப்பது உங்களுக்கு நித்திய ஆசீர்வாதங்களை உறுதி செய்கிறது. உங்கள் பெயர் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளதா?

இல்லையென்றால், இப்போது கடவுளிடம் பேச நேரம் ஒதுக்குங்கள். அவருடைய குடும்பத்தில் ஒரு அங்கமாக இருக்க வேண்டும் என்ற உங்கள் விருப்பத்தை வெளிப்படுத்துங்கள்.

இயேசுவை ஏற்றுக்கொள்வது என்றால் உண்மையிலேயே உங்கள் வாழ்க்கையில் வரும்படியாகவும் உங்கள் பாவங்களை மன்னிக்கும்படியாகவும், உங்கள் இறைவனும் இரட்சகருமாக ஆகும்படியாகவும் அவரிடம் கேட்பது தான். இது வெறுமனே ஒரு அறிவார்ந்த செயல் அல்ல, மாறாக, நேர்மையான நம்பிக்கை மற்றும் இதய உணர்வின் செயல்.

நீங்கள் இப்போது இயேசுவைப் பெற விரும்பினால், அவருடைய இரட்சிப்பின் பரிசை ஏற்றுக்கொள்ள விரும்பினால், இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, உங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பி, உங்கள் வாழ்நாள் முழுவதையும் அவரிடம் ஒப்பு கொடுங்கள். இது, குறிப்பிட்ட சொற்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு சடங்கு அல்ல, மாறாக, உங்கள் உண்மையுள்ள விசுவாசத்திற்கான ஒரு பிரார்த்தனை வழிகாட்டல்.

“பிதாவே, நான் உங்கள் சட்டங்களை மீறிவிட்டேன், என் பாவங்கள் என்னை உங்களிடமிருந்து பிரித்தன என்பதை நான் அறிவேன். நான் உண்மையிலேயே வருந்துகிறேன், இப்போது நான் என் கடந்த பாவ வாழ்க்கையிலிருந்து விலகி உங்களை நோக்கி வர விரும்புகிறேன். தயவு செய்து என்னை மன்னித்து, மீண்டும் பாவம் செய்வதைத் தவிர்க்க எனக்கு உதவுங்கள். உங்கள் மகன் இயேசு கிறிஸ்து என் பாவங்களுக்காக மரித்தார், மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுப்பப்பட்டார், உயிரோடு இருக்கிறார், என் ஜெபத்தைக் கேட்கிறார் என நான் நம்புகிறேன். நான் இயேசுவை இறைவனாக அழைக்கிறேன். என் வாழ்க்கையின், இந்த நாளிலிருந்து என் இதயத்தில் ஆட்சி செய்ய, உங்களுக்கு கீழ்ப்படிய எனக்கு உதவவும். என் வாழ்நாள் முழுவதும் உமது சித்தத்தைச் செய்ய உங்கள் பரிசுத்த ஆவியானவரை அனுப்புங்கள். இயேசுவின் நாமத்தில் ஆமென்.”

நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கு என்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.” (அப்போஸ்தலர் 2:38).

- Bro. M. Gnanaprakash -

# உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்.

- Sis. Eucalista -

ஒரு காட்டிலே ஒரு சிங்கம் இருந்தது. அது ராஜாவாக இருந்த போது மற்ற மிருகங்கல தொந்தரவு பண்ணல. அது உண்டு அதுட வேலை உண்டென்று இருந்தது. ரொம்ப அமைதியாக இருந்ததால சிங்கத்த மற்ற விலங்குகள் மதிக்கல. ஆனால், நரிக்கு சிங்கத்தின் மேல வெறுப்பு. ஒருநாள் சிங்கம் பெரிய பள்ளத்துல விழுந்திட்டு. அவ்வளவுதான் அந்த நரி சுற்றி இருந்த குரங்குகளை தூண்டி விட்டுட்டு.

குரங்குகள் அந்த சிங்கத்த கேலி பண்ணி கல் எறிய ஆரம்பித்தன. ஒன்று இரண்டு குரங்குகளில் ஆரம்பித்து நூற்றுக்கணக்கான குரங்குகள் வந்து எல்லாம் கல் எறிய ஆரம்பித்தன. சிங்கம் அங்கயும் இங்கயும் அல பாய்ந்திட்டே இருந்திச்சு. சில மணி நேரம் தான், டக்கென்று தாவி சிங்கம் மேலே வந்தது. அவ்வளவுதான் குரங்களுக்கு பெரிய அதிர்ச்சி சில குரங்குகள் சிங்கம் பக்கமா தாவி அய்யய்யோ சொறி சிங்கமே என்டிச்சு. சிங்கம் அதெல்லாம் பரவாயில்ல, நீங்க கல் எறியிற போது நான் கோவப்பட்டு கர்ச்சித்திருந்தா நீங்க பயந்து ஓடியிருப்பீங்க. நான் பொறுமையா இருந்ததால தான் நான் மேல வர முடிஞ்சிச்சு என்று அந்த பள்ளத்த காட்டிச்சு.

அதெப்படி என்று குரங்குகள் பார்த்த போது, குரங்குகள் எறிந்த கற்கள் மலை மாதிரி குவிஞ்சு சிங்கம் தாவி வர உதவிச்சு.

குடும்பம், வேலை செய்கின்ற இடம் ஆகியவற்றில் பொறுமை ரொம்ப, ரொம்ப அவசியம்.

நிலம் தோண்டப்படாவிட்டா மரம் வைத்து கனி பறிக்க முடியாது. கல் உடைக்கப்படாவிட்டால் சிலை செய்ய முடியாது. நெருப்பில் சுடப்படாவிட்டால் தங்கம் கிடைக்காது.

களியாக மற்றவங்களுக்கு பிரயோஜனப்படனும் என்டா, சிலையாக அழகாக இருக்கவேனுன்னா, தங்கமாக ஜொலிக்கனும்முன்னா கஷ்டங்கள் வரும்போது சந்தோஷப்படனும். ஏனெண்டா பெரிய ஆசீர்வாதங்களிற்கு தேவன் நம்மை தயார் படுத்திராரென்று அர்த்தம்.

ரோமர் 5:3,4 - அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும், உண்டாக்குகிறது என்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்.

ஏசாயா 62: 3 - நீ கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும், உன் தேவனுடைய கரத்தில் ராஜ முடியுமாயிருப்பாய்.



# ஜீவ ஒளி

- Bro. Gnanenthiran -

பாவ இருள் போக்கும் உலகின் ஒளி
பாரினில் உதித்த மெய்யான ஒளி
பக்தனை பிரகாசிப்பக்கும் ஒளி
பற்றி நடப்போர்க்கு ஜீவ ஒளி

இருளில் இருந்தவர்கள் கண்ட ஒளி
இடறி விழுந்தோரும் பெற்ற ஒளி
இரவையும் பகலாக்கித் தந்த ஒளி
இதயத்தில் உதித்திட்ட ஜீவ ஒளி

நோக்கிப் பார்த்திட்டோர் அடைந்த ஒளி
நோவாவின் பேழைக்குள் ஜொலித்த ஒளி
நோய் பிணி சாபங்கள் தீர்க்கும் ஒளி
நோவுக்கொண்டிருப்போருக்கு ஜீவ ஒளி

அந்தகாரத்தில் நம்மை மீட்ட ஒளி
அருணோதயமாக உதித்த ஒளி
ஆபிரகாம் சந்ததியான ஒளி
ஆச்சரியமாய் வந்த ஜீவ ஒளி

யாக்கோபின் விடிவெள்ளியான ஒளி
யாபேசை கனம் பண்ணி வைத்த ஒளி
யாவர்க்கும் பேரொளியான ஒளி
யதார்த்தமாய் தோன்றிய ஜீவ ஒளி

மோசேயின் முகத்தின் பிரகாச ஒளி
மோட்சத்தில் சேர்க்கும் சுவிசேஷ ஒளி
மோசத்தில் நாசத்தில் காக்கும் ஒளி
மோகத்தைப் பொசுக்கிடும் ஜீவ ஒளி

தாவீது வம்சத்தின் நித்திய ஒளி
தாகமாய் இருப்போர்க்கு சத்திய ஒளி
தானியேல் வாழ்வுக்கு ஞான ஒளி
தரணியில் தவிப்போர்க்கு ஜீவ ஒளி

யோபுவைப் புடமிட்டுப் பார்த்த ஒளி
யோசேப்பின் நெஞ்சத்தில் பரிசுத்த ஒளி
யோவான் ஸ்நானகனின் சாட்சி ஒளி
யோசனையில் பெரிய ஜீவ ஒளி

சோதித்துப்பொன்னாக துலங்கும் ஒளி
சோதோமில் நியாயத்தீர்ப்பின் ஒளி
சோதனையை சாதனையாக்கும் ஒளி
சோர்ந்திடா மைந்தர்க்கு ஜீவ ஒளி

இம்மானுவேலராய் பிறந்த ஒளி
இருப்பவராயென்றும் இருக்கும் ஒளி
இஸ்ரவேலின் பரிசுத்தரன ஒளி
இயேசுவே அந்த ஜீவ ஒளி

## வேதாகம புத்தகங்கள் பற்றிய புதுமையான புள்ளிவிபரங்கள்

### 2 சாமுவேல்

அதிகாரங்கள்: 24; வசனங்கள்: **695**

**சிறப்பம்சங்கள்**

- முக்கிய கதாபாத்திரம்: தாவீது
- 1 சாமுவேல் புத்தகத்தின் தொடர்ச்சி
- தாவீது தன் சொந்த வாழ்க்கையில் தவறுகள் செய்து விழுந்து போனாலும் எப்பொழுதும் தேவனிடத்திற்கு திரும்புகிறான்
- தனக்கு பின் வந்த அரசர்களை போலல்லாது தாவீது ஒரு போதும் விக்கிரக ஆராதனைக்கு இடங்கொடுக்கவில்லை
- இறுதி அதிகாரங்கள் தாவீதின் வார்த்தை மற்றும் வாழ்க்கையின் சுருக்கத்தை தெரிவிக்கின்றன

# கொரோனா எனும் ஆசான்

- Bro. Dinesh -

“மனுஷனை நம்புவதை பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்”. சங்கீதம் 118: 8

“இக்கட்டில் எங்களுக்கு உதவி செய்யும். மனுஷனுடைய உதவி விருதா. தேவனாலே பராக்கிரமம் செய்வோம்”. சங்கீதம் 60: 11, 12

## தேவனில் தங்கி வாழ்தல்

மனிதனின் ஆற்றல், இயலுமை எதுவாயிருந்தாலும் கொரோனா போன்ற மனித கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட செயல்கள் மூலம் தேவனில் மட்டுமே தங்கி வாழ வேண்டும் என்பதை தேவன் நமக்கு நினைப்பூட்டுகிறார்.

தேவனை கருத்தில் கொள்ளாமல் தேவனை விட்டு சுயாதீனமாய் வாழ்தல் பாவமாகும்.

சங்கீதம் 14:1ல் “தேவன் இல்லை என்று மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லுகிறான்” என வாசிக்கின்றோம்,

ஆனால், ஏசாயா 45:22ல் தேவன் சொல்கிறார்: “பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப்பாருங்கள். அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்ஞ நானே தேவன், வேறொருவரும் இல்லை.”

கொள்ளிவாய் சர்ப்பங்களால் தீண்டப்பட்டவர்கள் வெண்கல சர்ப்பத்தை பார்த்ததும் குணமடைந்தார்கள் என எண்ணாகமம் 21ம் அதிகாரத்தில் நாம் காண்கின்றோம்.

அன்பானவர்களே! இன்று தேவன் தம்மிடத்தில் திரும்பி தம்மில் மாத்திரம் சார்ந்து வாழும் படி நம்மை அழைக்கிறார்.

இன்று, ஆண்டவர் இயேசுவினிடத்தில் திரும்புவதற்கு நீங்கள் தயாரா?

## பரிசுத்தத்திற்கான முயற்சி

“அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான்.” 1 யோவான் 3:3

நிலவும் கொரோனா வைரஸ் நிலைமையானது, நமது சொந்த சுகாதார முறையை பரிசீலிக்கும் விதத்தில் நமது கண்களை திறந்துள்ளது.

அடிக்கடி கைகளை கழுவுங்கள். அழுக்கான எதையும் தொடாதிருங்கள். நோய்த்தொற்றை கொணரும் விடயங்களில் இருந்து விலகி இருங்கள் என பல ஆலோசனைகள் சொல்லப்பட்டுள்ளன.

சிந்தித்து பாருங்கள், கடந்த சில மாதங்களில் இவ்வண்ணம் சுகாதாரத்தை பேணுவதில் நாம் எவ்வளவு ஆர்வம் காட்டியுள்ளோம்!

ஆனால், உங்கள் ஆவிக்குரிய பரிசுத்தத்தை பேணுவதற்கு நீங்கள் எந்த அளவு முயற்சி எடுத்துள்ளீர்கள்?

ஆண்டவர் இயேசுவின் இரண்டாம்

வருகைக்கு ஆயத்தமாய் நாம் நமது ஆவிக்குரிய பரிசுத்தத்தை பேணுவதில் முயற்சியும் ஆர்வமும் காண்பிக்க வேண்டும்.

“தன்னை சுத்திகரித்துக் கொள்கிறான்” என 1 யோவான் 3:3ல் கூறப்படுவதால் நம்மை சுத்திகரித்து கொள்வது நமது தனிப்பட்ட பொறுப்பு என்பதை எடுத்துக்காட்டுகிறது.

அதே போல அந்த வசனத்திலே, “அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல” என கூறுவதன் மூலம் நாம் எவ்வளவு பரிசுத்தமாயிருக்க வேண்டும் என்பதற்கு ஓர் அளவு மட்டம் கொடுக்கப்பட்டுள்ளது.

நமது ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்பட வேண்டும் என 1 தெசலோனிக்கேயர் 5:23ல் சொல்லப்படுவதின் மூலம் நமது பரிசுத்தத்தில் எல்லையை நாம் அறிந்து கொள்கிறோம்.

ஆகவே நமது ஆவிக்குரிய பரிசுத்தத்தைக்குறித்து நாம் அதிக கரிசனை கொள்வது அவசியமாகும்.

### கடமை

“மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார். நியாயம் செய்து, இரக்கத்தை சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்.” மீகா 6:8

நாம் செய்ய வேண்டிய விடயங்கள் இருக்கின்றன. நாம் அவற்றை செய்யும் படி தேவன் நிலவும் இந்த நிலைமை மூலமாக நமது கவனத்தை தம் பால் ஈர்த்துள்ளார்.

நாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகளாவன:

- **ஆவிக்குரிய கடமை**

ஆவிக்குரிய காரியங்களை செய்ய நமக்கு நேரம் இல்லை என இவ்வளவு காலம் கூறிக்கொண்டிருந்தோம். ஆனால் அளவுக்கு அதிகமாகவே தேவன் நமக்கு நேரத்தை இந்த முடக்கப்பட்ட காலத்தில் கொடுத்திருக்கிறார். தனிப்பட்ட மற்றும் குடும்ப வேதவாசிப்பு, ஜெபம் என்பவற்றை நாம் செய்வோம்.

- **குடும்ப கடமை**

குடும்பத்தோடு நேரம் செலவிட்டு குடும்ப பொறுப்புக்களை நிறைவேற்றுவோம்.

- **சமூக கடமை**

அதிகாரிகள் பரிந்துரைக்கும் சுதாதார ஆலோசனைகளை பின்பற்றுவோம்

- **சகோதர கடமை**

ஒருவருக்காக ஒருவர் ஜெபிப்போம். ஒருவரோடொருவர் பகிர்ந்து கொள்வோம். எமது சகோதரர் மீது கரிசனை கொள்வோம்.

- **கிறிஸ்தவ கடமை**

நம்பிக்கையிழந்திருப்போருக்கு நம்பிக்கையின் மற்றும் எதிர்பார்ப்பின் சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்வோம்.

# உயிர்த்த நாள் உனக்கு எப்படி?

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! மிக வேகமாக சுழன்று கொண்டிருக்கும் மனித வாழ்விலே நாட்கள் கடந்து செல்வதும் வேகமாகவே உள்ளது.

தினமும் அதிகாலையில் எழுந்து தமது காரியங்களில் ஈடுபட்டு மாலை உறங்கும் நேரம் வரைக்கும் மனிதன் ஓடி கொண்டிருக்கிறான். ஆனால் இன்று ஏன் நேரத்திற்கு எழவில்லை என்று கேள்வி கேட்டால் சிலர் இன்று தான் எனக்கு ஓய்வு கிடைக்கும் நாள் அது தான் ஞாயிற்றுக்கிழமை ஆயிற்றே என்பார்கள்.

பாடசாலை பிள்ளை முதல் பளு தூக்கும் உழைப்பாளி வரை ஞாயிற்று தினம் இன்னும் சற்று உறங்கலாம் என நினைப்பார்கள்.

ஆனால் கிறிஸ்தவர்களாகிய நமக்கு இந்த நாள் எப்படி? நாம் மற்ற ஆறு நாட்களை விட நேரத்துடன் எழ வேண்டிய நாள் இது அல்லவா? ஏனெனில் இது ஆத்தும தேடலின் வேளையாய் இருக்கிறது. ஆண்டவர் இயேசு உயிர்த்த ஞாயிற்றுக்கிழமை அன்று இயேசுவின் உடலுக்கு சுகந்த வர்க்கமிட சென்ற பெண்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை தானே என்று தாமதமாக செல்லாமல் சோம்பேறிகளாயிராமல், அதிகாலையில் உற்சாகமாக இயேசுவின் கல்லறையைத்தான் தேடிச்சென்றனர். அதனால் அவர்களுக்கு கிடைத்ததோ மகிழ்ச்சியான செய்தி இயேசு உயிர்த்த செய்தி. அவர்களின் ஆத்தும இளைப்பாறுதலின் செய்தி. இப்பொழுதும் இயேசு உயிர்த்த ஞாயிற்றுக்கிழமையிலே நீயும் உலகத்தாரைப்போல சோம்பேறியாக சாக்குப்போக்கு சொல்லிக்கொண்டு தேவ சமுகத்தை அசட்டைப் பண்ணுகிறாயா? அல்லது இன்னும் கொஞ்சம் உறங்கட்டும் இன்னும் கொஞ்சம் தூங்கட்டும் என்று நீதி.6:10ல் கூறப்பட்டதைப்போல உறங்குகிறாயா? நீ எந்த நிலையில் இருக்கிறாய்?

சங்கீதம் 133ல் சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிற இடத்தில் (தேவ சபையில்) கர்த்தர் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார் என்று கூறுகிறது மட்டுமல்லாது (எபி.10:25) “சபைக்கூடுதலை சிலர் விட்டு விடுகிறது போல நாமும் விட்டுவிடாமல்” என்று கூறுகிறது. ஆகவே நீ இருக்கும் நிலையை உணர்ந்து மனம் திரும்பு. அதையே தேவன் உன்னிடம் எதிர்பார்க்கிறார். உற்சாகமாக தேவனைத் தேடு.. தேவன் உன்னை நடத்தவார்.



- Sis. Viji -

# விருத்தசேதனம் அவசியம்

பிறக்கும் ஒவ்வொரு ஆண்பிள்ளையும் விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும் என தேவன் ஆபிரகாமோடு உடன்படிக்கை பண்ணும் நேரத்தில் ஆபிரகாமுக்கு இஸ்மவேல் என்னும் ஆண்மகன் பிறந்திருந்த போதிலும் தேவனால் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட ஈசாக்கு பிறந்திருக்கவில்லை.

உன் சந்ததி வானத்து நட்சத்திரங்களை போலவும் கடற்கரை மணலை போலவும் இருக்கும் என தேவன் ஆபிரகாமுக்கு வாக்கு கொடுத்திருந் தாலும், அதை அவன் விசுவாசித்திருந்தும் அந்த விசுவாசம் அவனுக்கு நீதி-யாக எண்ணப்பட்டிருந்தாலும், அந்த வாக்குத்தத்தம் நிறைவேறும் வரை ஆபிரகாம் நெடுநாளாக காத்திருக்க வேண்டியதாயிருந்தது.

அவ்வாறு காத்திருக்கும் நாட்களில், பொறுமையிழந்தவனாய், தன் சொந்த மாமிச பலத்தின் மீது நம்பிக்கை கொண்டவனாய் ஆபிரகாம் தேவனின் பூரண சித்தத்தை அறியாமல் தன் இஷ்டப்படி நடந்து கொண்டான். ஆகவே தான் தேவன் தன் வாக்குத்தத்தை நிறை வேற்றும் காலம் வந்தபோது அவனது மாமிச பலத்தால் தான் அவ்வாக்குத்தத்தம் நிறைவேறியது என ஒருவரும் சொல்ல கூடாது என்பதற்கோர் அடையாளமாய் தொற்றூற்றொன்பதாவது வயதில் அவனை விருத்த சேதனம் செய்யும் படியாகவும் அதை நினைவுகூரும் விதமாக தலைமுறை தலைமுறையாக அவனது வம்சத்தில் பிறக்கும் ஒவ்வொரு ஆண்பிள்ளையும் விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும் எனவும் தேவன் அவனோடு உடன்படிக்கை பண்ணினார்.

தேவனின் எண்ணங்களும் அவர் செயற்படும் விதமும் எவ்வளவு ஆச்சரியமானவை!

அவன் விருத்தசேதனம் பெற்ற உடனேயே கர்த்தர் ஆபிரகாமுக்கு தரிசனமாகி ஓர் உற்பவகாலத்திட்டத்தில் சாராள் ஆபிரகாமுக்கு ஓர் குமாரனைப் பெறுவாள் என்றார். அதிகாரப்பகுப்பை கணக்கில் எடுக்காமல் ஆதியாகமம் 17ம் அதிகாரத்தின் கடைசி வசனத்தையும் 18ம் அதிகாரத்தின் முதல் வசனத்தையும் வாசிக்கும் போது தான் 18ம் அதிகாரத்தின் முதலாம் வசனத்தின் முதற்சொல்லாகிய "பின்பு" எனும் வார்த்தையின் அர்த்தத்தை நாம் புரிந்து கொள்கிறோம்.

நம்முடைய வாழ்க்கையிலும் தேவனுடைய ஆசீர்வாதங்களை நாம் ஆசிக்கிறோம். தேவனுடைய வாக்கு நம் வாழ்க்கையில் நிறைவேறாதா என ஏங்குகிறோம். ஆனால், தேவனின் பரிபூரண சித்தம் நம் வாழ்க்கையில் நிறைவேறாதபடி நம்முடைய சுயம் நமக்கு தடையாயிருக்கிறது.

ஆகவே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதால் கிருபையை பெற்ற நாம் இன்று நம்முடைய சரீரத்தில் விருத்தசேதனம் பெற அவசியமில்லாவிட்டாலும் நமக்கும் விருத்தசேதனம் அவசியம் என வேதாகமம் தெளிவாக சொல்கிறது.

**இருதயத்தில் விருத்தசேதனம்**

இருதயத்தின் நுனித்தோலை நீக்கி விடுங்கள் என எரேமியா 4:4ல் கர்த்தர் யூதா மனுஷரிடம் கூறியவர் இன்று நம்மிடமும் அதையே கூறுகிறார்.

உள்ளத்திலே யூதனானவனே யூதன், எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம் என ரோமர் 2:28 விருத்தசேதனத்தின்

புது அர்த்தம் சொல்லப்பட்டுள்ளது.

பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிற படியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியையினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை. இப்படியிருக்க, நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது. அதைக்குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது.

அது இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவ நீதியே. விசுவாசிக்கிற எவர்களுக்-குள்ளும் எவர்கள் மேலும் அது பலிக்கும், வித்தியாசமே இல்லை.

கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார்.

விருத்தசேதனமுள்ளவர்களை விசுவாசத்தினாலும், விருத்தசேதனம் இல்லாதவர்களை விசுவாசத்தின் மூலமாயும் நீதிமான்களாக்குகிற தேவன் ஒருவரே.

ஆபிரகாம் தேவனை விசுவாசித்-தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்லப்படுவது போல, ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும் என வேதம் சொல்கிறது.

அந்தப்படி, கிரியைகளில்லாமல் தேவனால் நீதிமான் என எண்ணப்படுகிற மனுஷனுடைய பாக்கியத்தைக் காண்பிக்கும் படி, “எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ, எவர்களுடைய பாவங்கள் மூடப்-பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள். எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, அவன் பாக்கியவான்” என்று தாவீது சொல்லியிருக்கிறான்.

நம் கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிக்கிற நமக்கும் அப்படியே எண்ணப்படும்.

அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்-களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்.

தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிடு. அப்பொழுது இரட்சிக்கப்படுவாய்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை உன் இருதயத்தில் விசுவாசிக்கும் விருத்தசேதனத்தையே தேவன் இன்று உன்னில் எதிர்பார்க்கிறார்.

### செவியில் விருத்தசேதனம்

அவர்கள் கேட்கும்படி நான் யாரோடே பேசி எச்சரிப்பேன்? அவர்களின் செவி விருத்தசேதனமில்லாதது. அவர்கள் கேட்கமாட்டார்கள் கர்த்தருடைய வசனம் அவர்களுக்கு நிந்தையாய் இருக்கிறது. அதின்மேல் அவர்களுக்கு விருப்பமில்லை.

இப்படி ஒரு குற்றச்சாட்டை தேவன் நம்மேல் வைப்பாராயின் நம் நிலை தான் என்ன?

நீ நிர்ப்பாக்கியம் உள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணயுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் சொல்லுகிறாய்.

ஆனால், தேவன் உன் மேல் வைக்கும் குற்றச்சாட்டோ அவருடைய வசனத்தை கேட்பதற்கான விருப்பம் உன்னிடத்தில் இல்லை என்பதாகும்.

தமது சகல பிரஸ்தாபத்தை பார்க்கிலும் தமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிற தேவன் தாமே நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்து விடுவேன என்றும் சொல்கிறார்.

பல வேலைகள் செய்வதில் மும்முரமாய் ஈடுபட்டிருந்தாலும் அவர் பாதத்தில் அமர்ந்து அவருடைய வார்-த்தையைக் கேட்ட மரியாளையே தேவன் பாராட்டும் விதத்தில் அவள் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்-கை தெரிந்து கொண்டாள் எனக்கூற-ினார்.

என் ஜனங்கள் அறிவில்லாமை-யி-னால் சங்காரமாகிறார்கள் என்ற தேவ-னின் இருதயக்குமுறலை நாம் ஓசியா 4:6ல் வாசிக்கிறோம்.

இன்று நம்முடைய வேத அறிவும் தேவனுடைய வார்த்தைக்கு நாம் காண்பிக்கும் ஆர்வமும் எப்படி-ப்பட்டது?

தேவனுடைய வார்த்தைக்கு என ஒதுக்குவதற்கு நேரமில்லாது ஓடிக்கொண்டு இருக்கும் நமக்கு நம்முடைய செவிகளில் விருத்தசேதனம் அவசியமாயிருக்கிறது.

தேவன் நம்மோடு பேச, நமக்கு வழிகாட்ட, தம்மை வெளிப்படுத்த ஆவலுடன் காத்திருக்கிறார்.

### முழு சரீரத்தில் விருத்தசேதனம்

நீங்கள் கிறிஸ்துவை பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத்துக்கு உரிய பாவசரீரத்தைக் களைந்து விட்டதினால், கையால் செய்யப்பட-ாத விருத்த சேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள் என கொலேசெயர் 2:11ல் கூறப்படுகிறது.

உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனம் இல்லாமையினாலேயும் மரித்தவர்-களாயிருந்த உங்களையும் அவரோடே கூட உயிர்ப்பித்து, அக்கிரமங்கள் எல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்து எழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே உங்களை அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கச்செய்திருக்கிறார்.

அக்கிரமத்தை நடப்பிக்கும் படி முன்னே நீங்கள் உங்கள் அவயவங்-களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்தது போல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்-களை நீதிக்கு அடிமைகளாக ஒப்பு-க்கொடுங்கள்.

பாவத்திற்கு நீங்கள் அடிமைகளாய் இருந்த காலத்தில், நீதிக்கு நீங்கினவர்களாயிருந்தீர்கள். இப்போது உங்களுக்கு வெட்கமாகத் தோன்றுக-ிற காரியங்களினாலே அக்காலத்தில் உங்களுக்கு என்ன பலன் கிடை-த்தது? அவைகளின் முடிவு மரணமே.

இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமா-குதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன்.

- Bro. Varaprasath -

# நீரோ, எங்களில் பதினாயிரம்பேருக்குச் சரி

தாவிதின் மகன் அப்சலோம் தன் தகப்பனுக்கு எதிராக கலகம் செய்து வந்த காலத்தில் அவனுக்கெதிரான யுத்தத்திற்கு தயாராகிக்கொண்டிருந்த போது தாவீதின் படைவீரர்கள் சொன்ன அந்த ஒரு வரி என்னை வெகுவாய் சிந்திக்க வைத்தது.

“நீரோ, எங்களில் பதினாயிரம் பேருக்குச் சரி” என அவர்கள் சொல்லிய அக்கூற்றின் மூலம் அவர்கள் தாவீதை எந்த அளவுக்கு பெறுமதிமிக்கவனாக கருதினார்கள் என்று புலப்படுகிறது.

அவர்களை பொருத்தமட்டில் தாவீது அவர்களில் பதினாயிரம் படைவீரருக்கு ஒப்பான பெறுமதி வாய்ந்தவர்.

நம்மை பொருத்தமட்டில் நமக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எந்த அளவுக்கு பெறுமதியானவர்?

பதினாயிரம் பேர்களில் சிறந்தவர் என உன்னதப்பாட்டு 5:10ல் வாசிக்கும் போது நமக்கு நம் ஆண்டவரை ஞாபகம் வருகிறதா?

லாசருவின் வீட்டில், விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டு வந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்த மரியாளுக்கு ஆண்டவர் அவ்வளவு பெறுமதி வாய்ந்தவராய் இருந்தார். (யோவான் 12:3).

ஏழையான ஒரு விதவையும் வந்து தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததை எல்லாம் போட்டுவிடும் அளவிற்கு அவளை பொருத்தமட்டில் தேவன் பெறுமதி வாய்ந்தவராயிருந்தார். (மாற்கு 12:44)

தேவனுக்கென செய்யும் ஊழியத்தில் தேவனுடைய ஜனங்களுக்காக “செலவு பண்ணவும் செலவு பண்ணப்படவும் விரும்புகிறேன்” என சொல்லும் அளவிற்கு தேவனை பெறுமதியுள்ளவராக பவுல் எண்ணினார். (2 கொரிந்தியர் 12:15)

இவர்கள் மாத்திரமா? எபிரேயர் 11ம் அதிகாரத்தில் உள்ள விசுவாச வீரர்களின் பட்டியலின் இறுதியில், “வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அனுபவித்தார்கள். கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைபார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டு தோல்களையும் வெள்ளாட்டு தோல்களையும் போர்த்துக் கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவித்தார்கள். உலகம் அவர்களுக்குப் பாத்திரமாய் இருக்கவில்லை. அவர்கள் வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள்.” என எழுதப்பட்டுள்ளது. இவர்கள் ஒவ்வொருவருக்கும் தேவன் எவ்வளவு பெறுமதியுள்ளவராயிருந்தார் என பார்த்தீர்களா? (எபிரேயர் 11:36-38)

தேவன் எனக்கு எவ்வளவு பெறுமதியானவர்?

தேவன் உங்களுக்கு எவ்வளவு பெறுமதியானவர்?

# பிழைத்தாலும் மரித்தாலும்

ஜான் மற்றும் பெட்டி ஸ்டாம் 1930களில் சீனாவுக்கு மிஷனரிகளாக இருந்தனர். சீனா ஒரு ஆபத்தான இடமாக இருந்தது. கம்யூனிஸ்ட் இராணுவம் வெளிநாட்டு மக்களை தம் நாட்டில் விரும்பவில்லை, அவர்கள் கிறிஸ்தவர்களை விரும்பவில்லை. ஒரு நாள் கம்யூனிஸ்ட்டுகள் ஸ்டாம் வாழ்ந்த சீன நகரத்தை கைப்பற்றி-னர். அவர்கள் ஜான், பெட்டி மற்றும் அவர்களது பெண் குழந்தை ஹெலன் ஆகியோரை சிறைபிடித்தனர்.

அன்று இரவு, ஜான், ஸ்டாம் மற்றும் ஹெலன் அனைவரும் ஒன்றாக ஒரு அறையில் பூட்டப்பட்டனர். இரவு நேரங்களில், ஸ்டாம் குழந்தை ஹெலனை விட்டுப் பிரிய நேரிட்டால் ஹெலனுக்கு தேவைப்படக்கூடிய பொருட்களை ஹெலனிடம் வைப்ப-தற்கு ஒரு வழியைக் கண்டுபிடித்தார். ஹெலன் தூங்கிய போர்வைகளுக்கு ஒரு சுத்தமான உடையில் இரண்டு ஐந்து டாலர்களை சுற்றி ஹெலன் தூங்கிக்-கொண்டிருந்த இடத்தில் வைத்தாள்.

மறுநாள் காலையில், ஜான் மற்றும் பெட்டி ஸ்டாம் ஆகியோர் நகரத்திற்கு வெளியே அழைத்துச் செல்லப்பட்டு கம்யூனிஸ்டுகளால் கொல்லப்பட்டனர். அவர்கள் இரத்தசாட்சிகளாக மாறினர், அதாவது கிறிஸ்துவை விசுவாசித்-ததால் உயிரை இழக்கும் மக்கள். குழந்தை ஹெலன் அந்த சிறிய அறை-யில் தனியாக இருந்தார். ஆனால் கர்த்தர் குழந்தையை மறக்கவில்லை. ஒரு பகலும் இரவும் கடந்து சென்றது. அடுத்த நாள், ஹெலன் முப்பது மணி நேரம் தனியாக வைக்கப்பட்டிருந்ததை ஸ்டாம்ஸின் கிறிஸ்தவ நண்பர்கள் கண்டார்கள். அவளுடைய தாய் அவளது போர்வைகளில் மறைத்து வைத்திருந்த பணம் இந்த சீன கிறிஸ்தவர்களுக்கு ஹெலனை பாதுகாப்பாக கொண்டு செல்ல போதுமானதாக இருந்தது.

ஜான் மற்றும் பெட்டி ஸ்டாமிற்கான கர்த்தரின் திட்டம் அவர்களின் மரணத்தின் மூலம் தன்னை மகிமைப்-படுத்துவதாகும். ஸ்டாம் தம்பதியனர் கர்த்தரிடம் சென்றடைந்திருந்தனர். அவருடைய சிம்மாசனத்தைச் சுற்றி துதி பாடல் பாடுகிறவர்களோடு அவர்கள் சேர்ந்தார்கள். நித்தியகாலம் முழுவதும் அவர்கள் அவரை புகழ்வார்கள். மிஷன் களத்தில் உள்ளவர்களின் கதையைக் கேட்டு பலர் அவர்களுடைய தேவைகளைப் பற்றி விழிப்புணர்வடைந்தார்கள். ஸ்டாம் தம்பதியினரின் தியாகத்தின் காரணமாக ஆயிரக்கணக்கானோர் கர்த்தருடைய வார்த்தையை பூமியின் இருண்ட இடங்களுக்கு கொண்டு சென்றுள்ளனர்.

ஆனால் ஹெலனுக்கான கர்த்தரின் திட்டம் அவளை உயிரோடு வைத்-திருப்பதன் மூலம் தன்னை மகிமைப்-படுத்துவதாகும். உலகெங்கிலும் உள்ள மக்கள் ஹெலனின் மீட்பைப் பற்றி கேள்விப்பட்டனர், அந்த உதவியற்ற சிறிய குழந்தையை அவர் பாதுகாத்-ததற்காக கர்த்தரைப் புகழ்ந்தனர்.


கர்த்தருக்காக நீங்கள் செய்த சேவையில் ஒருநாள் கர்த்தர் உங்களை ஒரு ஆபத்தான இடத்திற்கு அழைத்துச் செல்லக்கூடும். உங்கள் வாழ்க்கையிலோ அல்லது உங்கள் மரணத்திலோ அவர் மகிமைப்படுத்-தப்படுவதற்காக அவரை நம்பி அவரைப்-பின்பற்ற நீங்கள் தயாரா?

கர்த்தரைப் பின்பற்ற நான் பயப்படுகிறேனா? வாழ்வோ சாவோ அவருடைய தேர்வு எதுவாயிருந்-தாலும் அது எனக்கு மிகச் சிறந்தது என்னால் நம்ப முடியுமா?

வேறு எதையும் விட கர்த்தருடைய மகிமையை நான் அதிகமாய் விரும்பு-கிறேனா?

# வேதாகமம்

- Bro. Daniel -



வேதம் அது பரிசுத்த வேதம்
வேதம் அது பாறை படைதிட்ட வேதம்
வேதம் அது பாவத்தை வேரறுத்த வேதம்
வேதம் அது பாவியை மீட்கும் வேதம்
வேதம் அது பேதையை ஞானியாக்கும் வேதம்
வேதம் அது பரலோகம் சேர்க்கும் வேதம்
வேதம் அது உணர்வோடு கலக்கும் வேதம்
வேதம் அது உன்னை உயர்த்தும் வேதம்

நீ இந்த வேதத்தை சுமந்தால் அது உன்னை சுமக்கும்
நீ இந்த வேதத்தை வாசித்தால் அது உன்னை நேசிக்கும்
நீ இந்த வேதத்தை விசுவாசித்தால் அது உன்னை காக்கும்
இந்த வேதத்தை யார் புதைத்தாலும் அது விதையாகும்
இந்த வேதத்தை யார் எரித்தாலும் அது வெளிச்சமாகும்
இந்த வேதத்தை யார் கிழித்தாலும் துண்டு பிரசுரமாகும்


வேதம் இதில் அன்பெனும் வாசம் வீசும்
வேதம் இது அன்புக்காய் ஏங்கும் இதயங்களோடு பேசும்
மனிதனின் வார்த்தைகள் உன்னை காயப்படுத்தும்
வேதத்தின் வார்த்தையோ உன்னை சுகப்படுத்தும்
மனித வார்த்தை உன்னை பழி சொல்லும்
வேதத்தின் வார்த்தையோ வாழ வழி சொல்லும்

வேதத்தில் இருப்பதெல்லாம் சத்தியம்
இது அழைத்து செல்லும் இடம் தான் நித்தியம்
வானம் அழியும் பூமியும் அழியும்
அப்போதும் வேதம் தன் வார்த்தையை பொழியும்

பரிசுத்த வேதத்தை யாரும் அழிக்க முடியாது
பரிசுத்த வேதம் இல்லாமல் அகிலம் செழிக்க முடியாது
யாராயிருந்தாலும் வேதம் சத்தியத்தை எடுத்துச் சொல்லும்
என்ன நடந்தாலும் வேதம் தன் வேலையை முடித்துச் செல்லும்


வெளிப்படுத்தல் புத்தகத்திலிருந்து வேதபடிப்பு

**கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம்**




(+94) 112581901
(+94) 773595533
cfellowship@sltnet.lk

www.christianfellowshipcentre.com

CFC Colombo